# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஏப்ரல் 2003 பகுதி :4

திங்கள் இதழ்

மதுரைத் தமிழ்ச் சங்கம் • THE MADURAI TAMIL SANGAM •

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.என்.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, பி.எச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திருமதி. கிரிஜா பிரியதர்சினி பிஎச்.டி.,டிப்.லிட்.,பி.ஜி.டிப்., ஜர்னலிசம் | உறுப்பினர் |

# செந்தமிழ்

தொகுதி : 97 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஏப்ரல் 2003 பகுதி :4

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்


இதழ் மணம் 115

பங்கா இழுப்பதென் முன்னோர்கள்
செய்திட்ட பாக்கியமே 117
*தமிழ்த்தாத்தா உ.வே.சா*

பழமை இருந்த நிலை பாமரர் ஏதறிவார்? 120

*எய்யாமல் காப்பாய் திருவெம்பாவை - 11* 123
*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

தொல்காப்பியரின் தமிழ்க் காப்பு முயற்சிகள் 126
*பேராசிரியர். தமிழண்ணல்*

புகழேந்தி 131
*பேரறிஞர். நா. பாலுசாமி*

செம்பொருள் 150
*இரா.சதாசிவம்*

# இதழ் மணம்

திருவெம்பாவை "மொய்யார் தடம் பொய்கை" என்னும் பதினோராம் திருப்பாடலுக்கு உரை காணும் பேராசிரியர், சுப.அண்ணாமலை அவர்கள், "வாழ்ந்தோம் காண்" என்னும் தொடரை விளக்கும்போது, பிறரைப் போல, வாழ்வை உலகியலில் வீணாக்காமல், அருளைப்பெற்று, ஒருவாறு அனுபவித்தோம் என்பார், "வாழ்ந்தோம் காண்" என்றார், என எழுதுகிறார். இவ்வுரை பேராசிரியருடைய வாழ்க்கையைச் சிந்திக்கத் தூண்டுகிறது. அவர்கள் வாழ்நாளை வீழ்நாள்படாமல் நன்றாற்றியவர். இளமை தொடங்கித் தமிழ் பயின்ற நாள் முதலாக தமிழ்ப் பணியைத் தலைமேல் கொண்டார். தமிழ் இலக்கிய, மெய்ப்பொருட் சொற்பொழிவாளர்; நூலாசிரியர், திருமந்திர ஆராய்ச்சி உரையாசிரியர், தமிழ்ப் பேராசிரியர், கல்லூரி முதல்வர் எனத் தம் வாழ்நாளைப் பயனுள்ள வகையில் அமைதியாகப் பணியாற்றிய அரியவர்; பெரியவர். அவர்கள் மதுரை அண்ணாநகரில் திருக்கோயில் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மூலவராக விளங்குகிறார். அத்தகைய பேராசிரியர் தம் வாழ்க்கை அனுபவத்தையே திருவெம்பாவையில் விளக்குகிறார். அவருடைய திருவெம்பாவைத் தொடர் வெறும் சொற்கள் அல்லை; சுவை பொருந்திய அவர் வாழ்க்கை அனுபவமாகும். அவருக்குத் தமிழ் உலகம் மிகவும் கடப்பாடுடையது. நோயும் மூப்பும் "எய்யாமல் காப்பாய்" என இறைவனை வேண்டி நம் நன்றியை ஆற்றுவோம்.

பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் "தொல்காப்பியரின் தமிழ்க்காப்பு முயற்சிகள்" என்னும் தலைப்பில் தொல்காப்பியர் காலம் தொடங்கித் தமிழறிஞர்கள் தமிழ் மொழியின் தனித்தன்மையையும் தமிழ் மரபையும் பேணி வாழ்ந்த தொல் பெருங்குடி மரபினர் என்பதை அழுத்தமாக எடுத்துரைக்கிறார். பிற மொழி, புறப் பண்பாடுகளால் தமிழ் மக்களுடைய நாகரிகம், பண்பாடு, மரபுகள் தாக்கப்பட்டு சிதைந்து போகாமல் பேணி வாழ்ந்த தமிழ்ப் பேராசான்களின் மரபு வழிவந்த சான்றோர் பேராசிரியர் தமிழண்ணல். பேராசிரியர், "தென்னாடுடைய

சிவனே போற்றி! என்பது போலத் தென்னாடுடைய தொல்காப்பியரே போற்றி! என முழங்குபவர்களை வணங்குவோம்," என்ற சொற்கள் ஆழ்ந்த பொருள் பொதிந்த செய்தி; தமிழ் மக்களின் இன்றையத் தேவையுமாகும். கட்டுரை ஊன்றிப் படிக்கவேண்டிய ஒன்றாகும்.

பேராசிரியர் நா.பாலுசாமி அவர்கள் புகழேந்திப் புலவர் வாழ்வும் வாக்கும் குறித்த திறனாய்வுக் கட்டுரை, புகழேந்திப் புலவரின் தமிழ்ச் செல்வத்தை அங்கையில் நெல்லிக்கனி போலக் கற்பவர் நாவில் தமிழமுது ஊறச்செய்கிறது. சுவைத்து மகிழ்க.

தமிழ் மக்களுடைய கல்வி, நாகரிகம், மரபுகள் பல ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தன என்பதைக் கல்வெட்டுக்கள், இலக்கியங்கள் வழிநின்று முதுபெரும் அறிஞர் மகாதேவன் அவர்கள் உலகம் கண்டு *தலை வணங்கும் வண்ணம்* நூல் ஒன்று படைத்துள்ளார். அது குறித்த செய்தி "பழமை இருந்த நிலை பாமரர் ஏதறிவார்" என்னும் தலைப்பில் வெளிவருகிறது. பேராசிரியர் டாக்டர் ஐராவதம் மகாதேவன் அவர்களைச் செந்தமிழ் வாழ்த்தி மகிழ்கிறது.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சேதுபதி அரச குடும்பத்தினர் நடத்திய தமிழ் அரங்குகளின் மாட்சியையும் தமிழ் இன்பம் கண்டு தலைக்கூடி உள்ளப்பிரிந்த அரிய செய்தியையும் உ...வே.சா.வின் எழுத்தில் சுவைத்து மகிழலாம்.

இத்திங்களில்வேலூர் இராணிப் பேட்டைத் தமிழாசிரியை திருமதி. ச.பகவதி அவர்கள் செந்தமிழ் இதழுக்குரிய சந்தா கட்டணம் செலுத்தி செந்தமிழ் வாசகர் குழுவில் சேர்ந்துள்ளார்கள். செந்தமிழ் அவர்களை வாழ்த்துகிறது.

*பதிப்பாசிரியர்.*

# "பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே"

வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையரென்னும் வித்துவான் சௌந்தரியலகரி யென்னும் நூலைத் தமிழில் இயற்றி யாவராலும் மிகவும் பாராட்டப்பெற்று விளங்கிய கவிராச பண்டிதருடைய பரம்பரையில் உதித்தவர்; இராமநாதபுரம் ஸ்ரீ பாஸ்கர சேதுபதி யவர்கள் விருப்பத்தின்படி ஒரு மணி நேரத்தில் பன்னிரண்டு சிலேடைகளைப் பாடி அம்மன்னர் வழங்கிய ஐயாயிரம் ரூபாய் ஸம்மானத்தைப் பெற்றவர். அவருடைய குமாரர்களுள் மூத்தவர் மகாதேவ பாரதி என்பவர்; அவரும் விரைவிலே செய்யுள் இயற்றுவார்.

காலஞ்சென்ற ஸ்ரீ.பா.இராஜராஜேசுவர சேதுபதி மன்னரவர்கள் ஏறக்குறைய 35 வருஷங்களுக்கு முன்பு இராமநாதபுரத்தில் மிகவும் சிறப்பாக நவராத்திரி விழாவை நடத்தினார்கள். அவர்களுடைய குலதெய்வமாகிய ஸ்ரீ ராஜராஜேசுவரிக்கு நித்திய நைமித்திகங்கள் அலங்காரங்கள் முதலியன மிகவும் மேன்மையாக நடைபெற்றன. மன்னரவர்கள் விருப்பத்தின்படி இந்நாட்டின் பல பாகங்களிலிருந்து ஸம்ஸ்கிருத பண்டிதர்களும் தென்மொழிப் புலவர்களும் ஸங்கீத வித்துவான்களும் வந்திருந்தார்கள். நாள்தோறும் தமிழ் வித்துவான்கள் அம்பிகை விஷயமாகப் பல செய்யுட்களை இயற்றிக் கூறிச் செவிக்குணவை அளித்தார்கள்.

அப்போது ஒருநாள் பாஸ்கர சேதுபதியவர்களின் மாப்பிள்ளையவர்களது மாளிகையில் பல வித்துவான்கள் கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அனுபவத்தை மகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறினர். அப்பொழுது காலை 9 மணியிருக்கும். இயல்பான காற்று இல்லாமையால் அதிக வெப்பமாக இருந்தது. அம்மாளிகையில் பெரிய

பங்காக்கள் இருந்ததைக் கண்ட நான் பங்கா இழுப்பவன் இல்லையோ? என்று கேட்டேன். உடனே அக்கூட்டத்திலிருந்த மகா தேவ பாரதியார் திடீரென்றெழுந்து அங்கிருந்த பங்காவின் கயிறு கட்டியிருந்த நிலைக்கு அப்புறம் விரைந்து சென்றார். நிலையின்மேலுள்ள துவாரத்தின் வழியாக வெளியில் விடப்பட்டிருந்த கயிறு முடியப்பட்டிருந்தது. சென்ற பாரதியார் எழும்பி அந்த முடிச்சை எட்டிப் பிடித்துக்கொண்டார். பங்காக்காற்றை அனுபவிக்க அறிந்த அவர் அதனை இழுக்கும் முறையை அறியாமல், எப்படியாவது பங்காவை இழுத்து விரைவில் வெப்பத்தைப் போக்க வேண்டுமென்பதை எண்ணி அவசரமாக அந்தக் கயிற்று முடிச்சைக் கையில் பிடித்து இழுத்தார். அது கீழே வந்தது; பின்பு மேலே போயிற்று. அதைப் பிடித்துக்கொண்டிருந்த பாரதியார் அதை விட்டுவிட்டால், மறுபடியும் பிடித்து இழுக்க நேரமாகுமென்றெண்ணி அது மேலே போகும்பொழுது அதைப் பிடித்துக் தொங்கிக்கொண்டே தாமும் மேலே எழும்பிப்போனார். நிலைமிக உயரமானது; அவரே மெல்லிய தேகத்தையுடையவர். இப்படிக் கிழே வருகையில் இழுத்தும் மேலே போகையில் மேலே உடன்சென்றும் தம்மையே மறந்து பங்காவை இழுத்துக்கொண்டிருந்த அவரது நிலைமையை யாவரும் கண்டு வியப்புற்றனர்.

பின்பு பங்காக்காரன் வந்துவிட்டான். அவன் கயிற்றை அவரிடமிருந்து வாங்கிக்கொண்டு வழக்கம்போல் முடிச்சை அவிழ்த்துக் கயிற்றை நெடுகவிட்டு இழுக்க ஆரம்பித்தான். மகாதேவ பாரதியார் அவனுடைய செயலைச் சிறிதுநேரம் கூர்ந்து கவனித்துவிட்டு எங்களை நோக்கி வந்தார்; "உயர் குலத்தோன்றலும் கவிஞருமாகிய நீர் இவ்விதம் செய்யலாமா? உமக்கு முன்பு பழக்கம் இல்லையே!" என்று கேட்டேன். அவர் உத்ஸாகத்தோடும் உவகையோடும் "பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே" என்று பாட்டாக விடையளித்தார். அந்த அடி ஒரு கட்டளைக் கவித்துறையின்

ஈற்றடி ஏற்றதாக இருத்தலை அறிந்து, "பாட்டை முடித்துச் சொல்லவேண்டும்" என்றேன். உடனே அவர் சற்றும் தயங்காமல்,

"கொங்கார் பொழில்புடை சூழ்முக வாபுரிக் கொற்றவனும்
மங்காத சீர்த்தி வளர்பாற் கரமுகின் மாப்பிள்ளையின்
சிங்கார மாளிகை யிற்புல வோர்க்குச் சிரத்தையுடன்
பங்கா இழுப்பதென் முன்னோர்கள் செய்திட்ட பாக்கியமே"

என்ற கட்டளைக் கலித்துறையைச் சொல்லித் தமது பரம்பரைப் பெருமையை விளக்கினார். அங்கிருந்த யாவரும் அவருடைய ஆற்றலையும் வித்துவான்களிடத்தில் அவருக்கிருந்த அன்பையும் வியந்து பாராட்டினார்கள். அன்று மாலை ஸ்ரீ இராஜராஜேசுவர சேதுபதியவர்கள் வீற்றிருந்த சபையில் இந்த நிகழ்ச்சியை நான் தெரிவித்த போது அவர்கள் கேட்டு மகிழ்ந்தார்கள். மகாதேவ பாரதியார் பங்கா இழுக்கும்போது கீழே வருவதும் கயிறு மேலே செல்லுகையில் தாமும் மேலே செல்வதுமாகிய அந்தக் காட்சி இன்றும் என் கண்முன் நிற்கின்றது.

*தமிழ்த்தாத்தா உ.வே.சா*

# பழமை இருந்த நிலை பாமரர் ஏதறிவார்?

எழுநூற்றுப்பத்தொன்பது பக்கங்களைக் கொண்ட Early Tamil Epigraphy என்ற நூலை உருவாக்க ஐராவதம் மகாதேவன் 41 ஆண்டுகள் உழைத்திருக்கிறார்.

கி.மு. மூன்றாவது நூற்றாண்டின் இறுதிமுதல் அல்லது கல்வெட்டுத் தடயம் கிடைத்திருக்கும் பழங்காலம் முதல் கி.பி. ஆறாவது நூற்றாண்டுவரை தென்னிந்தியாவில் தமிழில் இதுவரை கிடைத்துள்ள எல்லாக் கல்வெட்டுகளையும் படமாக்கித் தொகுத்திருக்கிறார். அவை இருக்கும் இடம் பற்றிய விவரம் கொடுத்திருக்கிறார். அவற்றின் காலத்தை கணித்திருக்கிறார். அவர் வகுத்த இலக்கணத்திற்கேற்ப அவற்றைப் படித்திருக்கிறார். மற்றவர்கள் செய்த ஆய்வையும் முறையாகப் பரிசீலித் திருக்கிறார். பதிவு செய்திருக்கிறார். மொத்தம் 41 இடங்களிலுள்ள குன்றுகளின் மீது பலமுறை ஏறி இறங்கிப்படி எடுத்திருக்கிறார். மொத்தம் 89 தமிழ் - பிராமி கல்வெட்டுகள்; 21 வட்டெழுத்துக் கல்வெட்டுகள். காலப்போக்கில் நாளை களத்தில் இவை அழிந்துவிடலாம். அரிய இந்த வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்து அவற்றை வருகின்ற தலைமுறைக்கு விட்டுச் செல்கிறார். இந்தக் கல்வெட்டுக்கள் கொண்ட இத்தொகுப்பு ஒரு விலைமதிப்பற்ற களஞ்சியம். அவை அடிப்படையான சான்றுகள். ஆய்வாளர்கட்கான கல்வெட்டு நகல்கள். அவை நிரந்தரமானவை.

ஐராவதம் மகாதேவன், இக்கல்வெட்டுக்களில் காணப்படும் எழுத்துகளை தமிழ் - பிராமி (Tamil - Brahmi) எழுத்துகள் என வகைப்படுத்துகிறார். இவை சமணர்களும், பௌத்தர்களும் கொண்டு வந்து அறிமுகப்படுத்திய வரிவடிவத்தில் இருந்து உருவானவை எனக் கூறுகிறார்.

இரண்டாவதாக இந்நூலில் அவர் கண்டுள்ள இன்னொரு முடிவு புரட்சிகரமானது. மனித வரலாற்றிலேயே ஒரு புதுத்திருப்பத்தை ஏற்படுத்தக்கூடியது. கல்வெட்டுகள் மட்டுமன்றி இன்று எழுத்துகள் பொறிக்கப்பட்ட உடைந்துபோன மண் பாண்டங்களின் (Fragments of Potteries) கிடைக்கின்றன.

அவற்றின்மேல் பெயர்கள் கீறப்பட்டிருக்கின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டு தொடங்கிக் கிடைக்கும் இப்பாண்டங்கள் நகரங்களிருந்த இடங்களிலும் கிடைக்கின்றன. எல்லா வகையான தொழில் செய்த பின்னணியுள்ளவர்கள் வாழ்ந்த இடங்களிலும் கிடைக்கின்றன. அப்படியானால் இந்த மக்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும். பரவலாக இவை கிடைப்பதால் பலதரப்பட்ட மக்கள் வாழ்ந்த மிகச்சிறு கிராமப்பகுதிகளிலும் இவை கிடைப்பதால், அந்தக் கால கட்டத்தில் தமிழ்நாட்டில் எழுத்தறிவு சமுதாய வேறுபாடின்றி பரவலாக மக்கள் மத்தியில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

மேலும் இந்தக்காலப் பகுதியில் தமிழ் தவிர தென்னிந்தியாவில் எந்தப் பகுதியிலும் அங்கு பேசப்பட்ட மக்கள் மொழியில் கல்வெட்டுகளோ, மண்பாண்ட ஓடுகளோ இல்லை என்கிறார். ஆழ்ந்த ஆய்வின் அடிப்படையில் அவர் கண்டிருக்கும் இந்த முடிவுக்கு இலக்கியத்திலின்றும் ஆதாரம் காட்டுகிறார். சங்க நூல்களை இயற்றிய புலவர்கள் ஏறத்தாழ 500 பேர். இவர்களில் மன்னர்கள் இருக்கிறார்கள். வணிகர்கள் இருக்கிறார்கள். கைத்தொழில் செய்பவர்கள் இருக்கிறார்கள். பாணர்கள் இருக்கிறார்கள். குறிப்பிடத்தக்க அளவில் பல பெண்கள் இருக்கிறார்கள். இதையொத்த நிலை உலகில் வேறு எங்கும் இருந்ததாகத் தெரியவில்லை. எனவே கி.மு. இரண்டாவது, மூன்றாவது நூற்றாண்டுகள் போலவே, அதற்கு முன்பே தமிழ்ச் சமுதாயம் பரவலான எழுத்தறிவு பெற்ற சமுதாயமாக இருந்திருக்க வேண்டுமென்று முடிவுசெய்கிறார்.

இது வரலாற்று அறிஞர்களால் தேசிய அளவில் பெரிதும் மதிக்கப்படுகிற ஓர் அறிஞரின் மகத்தான கண்டுபிடிப்பு. மனித வரலாற்றில் நாகரிக வளர்ச்சிகள் பற்றிய நமது கருத்துக்களில் மாபெரும் மாற்றங்களை உருவாக்கும் தன்மை கொண்ட கண்டுபிடிப்பு. இதற்குச் சமமான ஒரு சமுதாயத்தை நாம் உலகு முழுவதுமாகத் தேடினால் கூட நாமறிந்தவரை சாக்ரடீசும், பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும் வாழ்ந்த ஏதென்ஸ் நகரம் ஒன்றைத்தான் கூறவேண்டும். அதுகூட ஒரு நகரம். கிராமங்கள்

நிறைந்த நாடன்று. ஐராவதம் மகாதேவனின் இந்த முடிவைத் தமிழ் அறிஞர்கள், வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் நிபுணர்கள் கவனத்துடன் ஆய்வு செய்ய வேண்டும். எல்லா வற்றையும் விட முக்கியமாக பாரதத்தின் பழம் பெருமையை நிலை நாட்டுவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள இன்றைய பாரத அரசு தனது பார்வையைச் சற்று விரிவாக்கி கங்கையின் பெருமைமட்டுமன்று, காவிரியின் பெருமையும் பாரதத்திற்குச் சொந்தம் என்ற உணர்வுடன் நமது பழமையை ஆய்வு செய்யும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

*(சென்னையில் 15.4.2003 இல் நடந்த ஐராவதம் மகாதேவன் எழுதிய Early* Tamil Epigraphy From the Earliest Times to the Sixth Century A.D. என்ற நூலின் வெளியீட்டு நிகழ்ச்சியில் அறிஞர் வா.செ.குழந்தைசாமி ஆற்றிய தலைமை உரையின் ஒருபகுதி. இந்நூல், அமெரிக்காவிலுள்ள ஹார்வேர்டு பல்கலைக்கழகம், கீழ்த்திசை ஆய்வுநூல் வரிசையில் 111 ஆண்டுகளில் தமிழ் தொடர்பாக வெளியிடும் முதல் நூலாகும்.

நன்றி
தினமணி, 16.04.2003

# திருவெம்பாவை 11

# எய்யாமல் காப்பாய்

பேராசிரியர் சுப.அண்ணாமலை

நீராடுவதற்காகப் பொய்கைக்கு வந்து சேர்ந்தனர் பாவை மகளிர். முன்பு நீராடி, இறைவனை வாழ்த்திப் பாடியதை நினைத்து, மீண்டும் நீராடி, அவனருள் பெறவிரும்பி, அதையே ஒரு வேண்டுகோளாக, அவர்கள் சார்பில் ஒருத்தி பாடுகிறாள்.

'சுடர்விட்டு எரியும் தீயின் சோதியைப் போன்ற செம்மை நிறம் உடைய பெருமானே, வெண்ணீறு அணிந்தவனே, வீடுபேறு என்ற செல்வத்தை உடையவனாகி, அதனை அடியார்க்கு வழங்கும் செல்வா'

*"ஆரழல்போல் செய்யா, வெண்ணீறாடி, செல்வா"*
என்று இறைவனை அழைக்கிறாள்.

இறைவனாகிய காதலனின் மேனியழகில் ஈடுபட்டுச் சொக்கிப்போய் நின்றார் என்பார், 'ஆரழல் போல் செய்யா' என்றார். அழகிய மேனி விரகதாபத்தை உண்டாக்கிச் சுட்டதும் அதுதானே! ஆதலால் தீயை உவமை கூறினார்.

'பூசுவதும் வெண்ணீறு' என்றபடி, சந்தனம் போல் அவன் புனைந்த திருநீற்றுக் கோலம், மேலும் மயக்கியது என்பார், 'வெண்ணீறாடி' என்றார். அவன் அளித்த காதல் இன்பத்தை கருதி, இன்பச் செல்வம் உடையவனே என்பார், 'செல்வா' என்று அழைக்கின்றார்.

தோழியின் பேச்சு தொடர்கிறது!

'முன்பு பொய்கையில் இறங்கி, கையினால் தண்ணீரைத் தள்ளித் தள்ளி, விரைவாக முழுகினோம். இறைவா, உன்புகழைப் பாடினோம்; மகிழ்ந்தோம்.

*"மொய்யார் தடம்பொய்கை புக்கு, முகேர் என்னக்*
*கையால் குடைந்து, குடைந்து, உன் கழல்பாடி*
*ஐயா! வழியடியோம் வாழ்ந்தோம் காண்"*

என்று கூறுகிறாள்.

உண்மையில், இது அருள் அனுபவம். வேறு பிறவியாகப் பிறக்காமல், சிவனடியார்களின் கூட்டுறவில் பக்தியை வளர்க்கும் பிறவி பெற்றதை, 'மொய்யார் தடம் பொய்கை புக்கு' என்று குறிப்பிட்டார். மொய்த்தல், இறைவனையே சார்ந்து வாழ்தல். இறைவன் அருளை ஓரளவு பெற்று, அவ்வருளால் சிலசில செயல்களைச் செய்தோம் என்பதைக் "கையால் குடைந்து குடைந்து" என்பதால் தெரிவிக்கின்றார். அருளைப் பெறுவதற்குப் பிறவிதோறும் பக்குவப்பட்டு வந்தோம் என்பார், "வழியடியோம்" என்றார். அந்த அளவில் இறைவனுக்கு நன்றி கூறும் முகத்தான், அவன் புகழைப்பாடினார். பிறரைப் போல, வாழ்வை, உலகியலில் வீணாக்காமல், அருளைப்பெற்று, ஒருவாறு அனுபவித்தோம் என்பார், "வாழ்ந்தோம் காண்" என்றார்.

'ஆயினும், இறைவா, உன் அருளை முழுவதும் பெற்றோமில்லை. உடம்பில் இருந்து, வாழும் பிறவியைப் போக்கினோமில்லை. ஆதலால், அருள் வாழ்வு தந்த நீ, சிவவாழ்வும் தரவேண்டும்' என்று வேண்டுகின்றார். இதனையே தமது காதலனுபவத்திற்கும் பொருந்தும்படி அமைத்துள்ளார். இந்த நோக்கில், பாடலின் அடிகளை மீண்டும் பார்ப்போம்.

'எம் தலைவனே, உன் காதலைப் பெறும் சூழலில் புகுந்தோம்' என்பார், "மொய்யார் தடம் பொய்கை புக்கு" என்றார். இங்கு மொய்த்தல், இறைவனை நெருங்குதல். கையால் தான் தண்ணீரைத் தள்ளித் தள்ளி விரைந்து முழுகினார் என்பது, பாய்ந்தாடவில்லை என்பதை மறைமுகமாகக் காட்டி, இறைவனுடன் காதல் அனுபவம், ஓரளவு, தொடக்க நிலையில், சிறிது நேரந்தான் கிடைத்தது என்பதைக் குறிக்கும். "முகேர்" என்ற ஒலிக்குறிப்பு, இறையின்பம் சடுதியில் கிடைத்து மறைந்ததைக் குறிக்கும்.

'இறைவா, நீ பிரிந்துவிட்டாய். ஆயினும், உன் கருத்தின்படி நடக்கும் காதலியராகிய நாங்கள், உன்னையே நினைத்து, உன் புகழ் பேசி, என்றாவது ஒருநாள் நீ கருணை செய்வாய் என்று காத்திருக்கிறோம் என்பார், "வழியடியோம் வாழ்ந்தோங் காண்" என்றார்.

'இறைவா, உன்னோடு கூடி, உன்னால் முழுவதாக

ஏற்றுக்கொள்ளப்பட்டு என்றும் பிரியா வாழ்வைப் பெறவேண்டுகிறோம்' என்பார், அவனோடு பிரியா வாழ்வு பெற்றுள்ள அம்பிகையைச் சுட்டிக்காட்டி,

"*மையார் தடங்கண் மடந்தை மணவாளா*"
என்று அழைக்கின்றார்.

முதலில் அருள் அனுபவம் கிடைத்தது ஆதலால், கருணையால் அகன்ற பார்வையை உடையவள்' - என்று, அருட்சத்தியைக் குறிப்பிட்டு, 'அவள் மணவாளன்' என்று இறைவனைக் கூறினார். ஏன் எனில், அவனுடைய சிவவாழ்வும் வேண்டும் என்பதற்காக.

'இறைவா, நீ அடியார்களை ஆட்கொண்டு அருளுகின்ற செயல் - அதாவது காட்சியளித்து, மறைந்து, வேதனைப்படுத்தி, பின்பு காட்சியளித்து, மீண்டும் மறைந்து, இப்படிச் செய்யும் செயல், உனக்கு விளையாட்டு. ஆனால் உன் அருளுக்கு ஏங்கியும் உலக வாழ்வில் உவர்ப்புற்றும்ம் துன்புறுகின்ற எமக்குப் பெரிய வேதனை. இதைத் தாங்கிக் கொள்ள, மறக்க, பொருட்படுத்தாமல் இருக்க, உன் கருணையை மட்டும் நினைக்க - இப்படி இன்னும் என்னென்ன வகையுண்டோ, அத்தனையும் கையாண்டு விட்டோம். இனி வகையுமில்லை; வழியுமில்லை. தாங்க முடியாது எங்களால். இளைத்துச் சோர்ந்து விடாதபடி எங்களைக் காப்பாயாக.

"*ஐயா, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின்*
*உய்வார்கள் உய்யும் வகை எல்லாம் உய்ந்தொழிந்தோம்*
*எய்யாமல் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்*"

இவ்வடிக்கும் காதல் துறையில் பொருள் செய்யலாம். 'எம் தலைவனாகிய நீ பலமுறையும் வந்தாய். கருணை காட்டினாய்; பின்பு பிரிந்தாய். பன்னெடுங்காலம் திரும்பியே பார்க்கவில்லை. இது உனக்கு விளையாட்டு. பிரிவுத்துயரைத் தாங்கிக் கொள்வதற்கு, எல்லா வகையும் கையாண்டு பார்த்துவிட்டோம். இனி உன்னைக் காணாமல் ஒரு கணமும் தரியோம். இப்படியே இருந்தால், மெலிந்து உயிர் விடுவோம். ஆதலால் எம்மைக் காப்பாற்றுவாயாக' என்று சிவபிரானோடு கலந்து மகிழும் காதலே வேண்டுகிறாள் இந்நோன்பில் ஈடுபடும் பெண்.

# தொல்காப்பியரின் தமிழ்க் காப்பு முயற்சிகள்

*பேராசிரியர். தமிழண்ணல்*

'தமிழ் இந்தியா' என்று பி.டி. சீனிவாசய்யங்கார் கூறுவதற்கு ஏற்ப, தெற்கே குமரிக்கண்டம் தொடங்கி, இந்திய நாடு முழுவதும் தமிழும் தமிழின் கிளைமொழிகளும் மட்டுமே வழங்கிய காலம் உண்டு. (These facts can only prove that people speaking dialects allied to Tamil once inhabited the whole of India.... P.T.S., History of Tamils. P.2) "மலி திரை ஊர்ந்துதன் மண் கடல் வௌவலின்' (கலி.104). "பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள" (சிலம்பு.11). குமரிக் கண்டம் கடலால் கொள்ளப்பட்ட நிலையில் தமிழரையும், ஏடுகள் கடலுக்குள் மூழ்கிவிட்டதால், தமிழையும் காக்கும் முயற்சிகள் தேவைப்பட்டன. 'நிலந்தரு திருவிற் பாண்டியன்' மூழ்கிப் போகாது எஞ்சிய மக்களைக் காப்பாற்றினான். தொல்காப்பியர் எஞ்சிய ஏடுகளையும் தன் புலமையையும் கொண்டு தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மூன்றையும் காப்பாற்றி, இன்றுவரை நிலைபெற அடி கோலினார்.

வடக்கே ஆரியர்கள் புகுந்து, பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. தமிழ்மொழி, தன் கிளை மொழிகளாகிய வடுகு (தெலுங்கு) வரை, விலகிப் போகவே, 'வேங்கடம் குமரிக்கடலிடையே' மட்டும் செழித்து வளரும் மொழியாயிற்று. 'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்து' என்பது பணம்பாரனார் பாயிரம். 'வண்புகழ் மூவர் தண் பொழில் வரைப்பின், நாற்பெயர் எல்லை அகத்தவர் (1386) என்பது தொல்காப்பியம்

இன்றைய இந்தியா பல தேசிய இனங்களின் கூட்டமைப்பு; பல தேசிய மொழிகளின் ஒருங்கிணைப்பு. கழிந்தவை போக, வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்த் தேசியத்தை முதன் முதல் எல்லையிட்டு வடிவமைத்தவர் தொல்காப்பியர்.

இன்று அவர் இருந்து இவ்வாறு பல இடத்தும் நிலைநிறுத்தும் தமிழ்த்தேசிய நூலை எழுதியிருந்தால், அவர் கதி யாதாகியிருக்குமோ; யாமறியோம்?

**இரண்டாவதாக ஒரு முக்கியமான செய்தி:**

தொல்காப்பியர் வடவேங்கடம் தென்குமரியிடையே வழங்கிய உலக வழக்கையும் இலக்கிய வழக்கையும் மட்டுமல்லாமல் "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்த"தாக வருகிறது. இரண்டாவதாக வரும் இது, கடல் கொண்ட நிலமாகும். அங்கிருந்து, அரசனால் காப்பாற்றப்பட்டு வந்த இப் பேராசான், அத்தென்பகுதிக்குரியவராக மட்டுமே இருத்தல் இயலும். தென்னாடுடைய சிவனே போற்றி என்பது போலத் தென்னாடுடைய தொல்காப்பியரே போற்றி என, முழங்குபவர்களை வணங்குவோம்.

தொல்காப்பியர் காலத்தே, ஆரியர்களின் வருகையால் இந்திய நாடு பெருமாற்றத்திற்குட்பட்டுவிட்டது. வடக்கே அதன் செல்வாக்கும் தெற்கே தமிழின் செல்வாக்கும் மிகுந்திருந்தன. இன்றைய இந்திய மொழிகள் அனைத்தினுடைய அடிப்படைகள் தமிழாக இருக்கும்; மேற்பூச்சும் புறவடிவமும் வடமொழியாக இருக்கும். இவையும் முற்கூறிய அறிஞர்தம் கருத்தேயாகும். இந்நிலையில் தமிழ் மரபு, முன்பே மிக முதிர்ந்த நிலையில் வளர்ச்சி பெற்றிருந்ததால், அதனைப் புறப் பண்பாடுகளாலும் பிற மொழிக் கலப்புக்களாலும் தாக்கப்படாமல் காப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டார் தொல்காப்பியர் இதனால்தான் வேறு உலகமொழிகள் எதனிலும் காணப்படாத 'பொருளதிகாரம்' என்ற ஒன்றை, ஏனைய இலக்கணத்தை விட மிக விரிவாக எழுதினார். அவர் வடமொழிபயின்றவர். அவ்வாறு பயின்றிராவிட்டால், தமிழின் தனித்தன்மையைப் பிரித்துக்காட்டிக் காப்பாற்றியிருக்க முடியாது. எழுத்துக்கு மாத்திரை அளவு கணக்கிடும் போது, "அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே; அஃது இவண் நுவலாது, எழுந்து புறத்து இசைக்கும் மெய்தெரி வளி இசை அளவு நுவன்றிசினே" (102)

என்று, "அந்தணர்கள் உள்ளே இருந்து எழுகின்ற காற்றுக்கும் அளவு கொள்வார்கள்; யான் அவ்வாறன்றிப் புறத்தே இசைக்கும் ஒலிக்கு மட்டுமே அளவு கூறியுள்ளேன்" என்பார் அவர். இத் 'தன்மை ஒருமை' நடை காட்டுவதென்ன? அது மட்டுமா? "வட சொற்கிளவி வடவெழுத்து ஒரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்பார் அவர் (884)

அன்று தமிழொடு கலக்கக் கூடிய நிலையில், இந்திய நாட்டிற்குள் இருந்த ஒரே மொழி வட மொழிதான். அங்ஙனம் வட சொல் வரும்போது, 'வட எழுத்து ஒரீஇ' - அதாவது வட சொல் ஒலிப்பை அறவே களைந்து நீக்கிவிட்டுத் தமிழ் ஒலியமைப்புப்படி அச்சொல்லை மாற்றுக என்பது கருத்து. 'ஒரீஇ' என அளபெடை பெய்தது, அறவே கூடாது என்பதற்காகவே. ஒலிக்கலப்பு ஒரு மொழியைச் சிதைத்துவிடும் என அறிந்திருந்த மொழிப் பேரறிஞர் அவர். அதனால்தானே ஆங்கிலேயன் டின்னவேலி, மெசுரா என்றெல்லாம் நம் சொற்களைத் தன் மொழியின் ஒலியமைப்பிற்கு மாற்றினான். இன்று பெருவுடையாரைப் 'பிருகதீஸ்வரர்' என்றும் அண்ணாமலையாரை 'அருணாஸலேஸ்வரர்' என்றும் சுப்பிரமணியரை 'ஸுப்ரஹ்மண்ய' என்றும் தமிழில் உச்சரிப்பவர்கள், தொல்காப்பியரைச் சொந்தங்கொண்டாடு முன், தாம் அனைவரும் அப்பேரறிஞன் வழிக்குத் திருந்தினால் நல்லதல்லவா?

நச்சினார்க்கினியர் எனும் உரையாசிரியர்தான் தொல்காப்பியரை, 'சமதக்கினி முனிவரின் மகனார் திரணதூமாக்கினியார்' என்று பொருந்தாத கதை ஒன்றைப் புனைந்து எழுதியுள்ளார். யாழ்ப்பாணம் கணேசையர் தமது பதிப்பில் இதனடிப்படையில், பழைய காப்பியக்குடியில் பிறந்த அந்தணர் தொல்காப்பியர் என எழுதியுள்ளார். இவை வேறு யாருமே கூறாதன. தொல்காப்பியத்திற்கு முதன்முதல் உரை எழுதிய இளம்பூரணர், நச்சினார்க்கினியரைத் தம் முன்னோடியாகக் கொண்ட பேராசிரியர், வடநூற் கடல் கண்டவர் எனப்படும் சேனாவரையர் மற்றும் கல்லாடர் யாருமே கூறாதன. தெய்வச்சிலையார் 'இந்நூல் செய்தான் ஒரு வைதிக முனிவன்

ஆதலின்' என்பது, அந்தணன் எனப் பொருள்படாது. அவரே பதி பசு பாசம் ஆகிய முப்பொருளுண்மையைக் கூறுவதும் நமசிவாய என்னும் திருவைந்தெழுந்தைக் குறிப்பால் காட்டுவதும் அவர் ஓர் சைவ சித்தாந்தி என்பதையே பறைசாற்றுகின்றன. வேறு யாருக்குமே தெரியாத சிறு குறிப்புமில்லாத கதையை வைதிகப் பார்வையில தொல்காப்பிய உரை எழுதிய நச்சினார்க்கினியருக்கு மட்டும் தெரிந்தது வியப்பே. மேலும் அக்கதை முழுவதும் படித்தால், தொல்லாசான் போல்வார்க்கு ஒத்துவராததும் நாகரிகமற்றதுமான புராணக் கதை போன்றதாகும்.

சங்க காலத்தில் தொல்கபிலர் என்பது போன்றது தொல்காப்பியன் எனும் இயற்பெயர். காப்பியன், பல்காப்பியன், காப்பியாற்றுக் காப்பியனார் என வேறு பல புலவர்கள் வாழ்ந்துள்ளனர். தமிழகத்தில் காப்பியாறு, காப்பியக்குடி, காப்பியாமூர் என ஆறு, குடி, ஊர்ப்பெயர்கள் வழங்கியுள்ளன. காவ்ய கோத்திரத்தில் பிறந்த காப்பியனார் என்பது பொருந்தாது. காப்பியாற்றுக் காப்பியனாரை, காப்பியாற்றில் (ஊர்) பிறந்தவர் என்பதா? காவ்ய ஆற்றில் பிறந்தவர் என்பதா? காப்பியஞ் சேந்தனார் (நற்.246) காப்பியன் மகன் சேந்தனாவார். சிலப்பதிகாரத்தில், வரந்தருகாதையில் 'காப்பியத் தொல்குடி' (83) என வருகிறது. தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்கள் 'காப்பியக்குடி என்பது சீகாழிக்குத் தென்கிழக்கிலுள்ளதோர் ஊர்' என்றே, அடிக்குறிப்பு எழுதியுள்ளார்.

தமிழ்க் குடமுழுக்கு, அருச்சனை வழிபாடு பற்றிப் பெரிதும் 'சர்ச்சை' செய்பவர்கள், தம்மையும் தொல்காப்பியரையும் ஒரு குலத்தவராகக் கருதி மகிழ்வது நன்றே. ஆயினும் அப்பேராசானுக்கு எதிராக நடக்காமல் ஒத்துப் போகலாமே? 'மந்திரம்' என்பது என்ன? வடமொழியில் மட்டுமே மந்திரம் உளதா? இதை விளக்கவந்த தொல்காப்பியர் 'அந்தணர் வேதமே மந்திரம் என்ப' என்று சொல்லிப்போயிருக்கலாம். "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறை மொழிதானே மந்திரம் என்ப" (1434). பயனை விளைவிக்க வல்ல சொற்களைப் பேசவல்ல சான்றோர்க்குப் பொது இது. மறை மொழி - பொருள்

பொதிந்தமொழி. பேராசிரியர் இந்த இடத்தில், 'தானே என்று பிரித்தான் இவை தமிழ் மந்திரம் என்றற்கு' என விளக்கம் எழுதியுள்ளார். இறைவனின் திருமுன் தமிழில் ஓதினால் 'தீட்டு' எனும் தீயவர்கள் தொல்காப்பியரைச் சொந்தங் கொண்டாட வெட்கமா இல்லையா?

திருவள்ளுவரை ஸ்ரீவல்லப எனும் பெயரின் தமிழாக்கமே எனக் கதை கட்டுவதுண்டு. ஒரு திரைப்படத்தில், சாஸ்திரிகள், தம் வீட்டைச் சோதனையிட வந்த காவலர்களிடம் "வேதமந்திரம் சொல்லும் வாயால் பொய் பேச மாட்டோம் ஐயா" என்று கதறுகிறார். தொல்காப்பியர், திருவள்ளுவர் போன்றவர்கள் உலகப் பேரறிஞர்கள். அவர்களின் குல ஆராய்ச்சி தேவையற்றது. அப்படியே அவர்கள் குறிப்பிட்ட குலத்தவர்கள் தான் என்று நிலைநாட்ட விரும்புகிறவர்கள், அச்சான்றோர் சொன்ன - காட்டிய வழியில் இம்மியளவும் தவறாமல் நடப்பார்களா? நடந்தால் அந்நற்செயலைத் தமிழகமே வாழ்த்தி வரவேற்குமே!

# புகழேந்தி

பேரறிஞர். நா. பாலுசாமி

புகழேந்தி பெரும்புலவர்; வெண்பாப் புலி; இவர் பாடிய வெண்பாக்களுக்கு இணையாக முன்னும் பாடினோர் இலர்; பின்னும் பாடுவோர் இலர்; என்றும் பாடுவோர் இலராவர். எளிமை, வெள்ளைத்தன்மை, நடையோட்டம், சந்த இன்பம், சொல்நயம் இன்ன பிற இலக்கியக் கூறுகள் அமைவுறப் பெற்றவை இவர்தம் வெண்பாக்கள். இடைக்காலத்தில் வாழ்ந்த கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகியோர் வரிசையில் நீடு புகழுடன் நிற்பவர் புகழேந்தி. இவர்தம் பெயருக்கு ஏற்ப இவர்தம் புலமை வீறு. இத்தகை பெரும்புலவருக்கு நம்பத்தகுந்த வரலாற்று வாழ்க்கைக் குறிப்புகள் கிடைத்தில. கதைகளும், புனைந்துரைகளும் இவர்தம் வாழ்க்கையைச் சூழ்ந்து கொண்டன. உண்மை காண இயலவில்லை. எனினும், இவரது நூல்கொண்டே இவரை ஓரளவு அறிந்து கொள்ள முயல்வோம்.

புகழேந்தி என்பது காரணப்பெயரா? இடுகுறிப் பெயரா? ஐயமே. இவர் பாவுலகில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கும் போது, அறிஞர் சிலர் இவரது திறமையை மெச்சி இவருக்குச் சிறப்புப் பெயராக - காரணச் சிறப்புப் பெயராக - இப்பெயரை இட்டிருக்கலாம் என்பது ஒரு கருத்து; மற்றொன்று, இவர்தம் பெற்றோர் இவருக்குக் காரணம் கருதாது இட்டபெயரே இது; ஆயின், பிற்காலத்தில் இவர் புகழையீட்டிக் கொண்டது பொருத்தமாக அமைந்துவிட்டது என்பதாம். காரணமோ, இன்மையோ கவலை வேண்டா. இவர்தம் படைப்பாகிய "நளவெண்பா" என்னும் நூலே இவருக்கு இணையற்ற புகழினைத் தந்தது எனக் கொள்ளலாம். சங்க கால மரபினை ஒட்டி இப்புலவர் பெருமானுக்கு இவர்தம் பெற்றோர் நல்ல தமிழ்ப் பெயரைச் சூட்டியிருப்பது மகிழ்ச்சி தருவதொன்றாம். பெற்றோர் பெயர்களும் தெரிந்தில.

## ஊர்

இவரது நாடு தொண்டை நாடு. பாலாற்றின் கரையில் உள்ள பொற்களந்தை என்பது இவர் ஊர். சில அறிஞர் இவர் பாண்டி நாட்டார் எனவும் கூறுவர். எது எவ்வாறாயினும் இவர் சோழ னோடும் பாண்டியனோடும் தொடர்புடையவர் என்பது பின்னர்க் கூறப்படும். இவர் வேளாண் மரபினராகக் கருதப்படுவர்

## கல்வி

இவரது கல்வித் தகுதியை இவர்தம் படைப்பாகிய நளவெண்பா ஒன்றே தெற்றெனக் காட்டும். இளமையிலேயே கல்வி கேள்விகளில் உயர்ந்த புலமை பெற்றவராக விளங்கினார். இவரது அளப்பரிய அறிவையும் ஆற்றலையும் கண்டுணர்ந்த அறிஞர் பலரும், இப்புலவர் பெருமான் வீற்றிருக்க வேண்டும் இடம் அரசவளாகமே எனக் கருதியிருந்தனர். இவர்தம் நுண்ணறிவையும் கலை ஞானத்தையும் பாநலம் நாநலம் முதலியவற்றையும் பலகாலும் கேள்விப்பட்ட பாண்டியன், தனது அவைக்களப் புலவராக அணைத்துக் கொண்டான். அப்பாண்டியன் வரகுணன் என்று கருதப்படுகிறது. புலவர் பெருமானுக்கு மன்னன் பல்வேறு சிறப்புக்களைச் செய்து பேணிவந்தான். அந்நிலையில், பாண்டியன் தமிழ்ப்பற்றாளன் ஆதலின், தன் அருமைத் திருமகளுக்குப் புகழேந்தியைக் கொண்டு தமிழ்ப்பயிற்சியை நன்கு உண்டாக்கி வந்தான். அரசகுமாரியும் நல்லாசிரியர்பால் நன்கு கற்றுத் தேர்ந்து தெளிவுடையளாயினள்.

## காலம்

இடைக்காலப்பாண்டியரும் சேரரும் வலி ஒடுங்கியிருந்த காலத்தில் சோழர்கள் பேரரசர்களாக விளங்கினர். கி.பி. 9 ஆம் நூற்றாண்டு தொடங்கி 13-ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சோழப்பேரரசு நிலைத்திருந்தது. சேணாட்டார் யாவரும் சோணாட்டாரை மதித்துப் போற்றிய காலமே புகழேந்தியார் வாழ்ந்த காலம். ஏறத்தாழ கி.பி. 14 ஆம் நூற்றாண்டினர் எனலாம். பாண்டி நாட்டில் வரகுண பாண்டியன் ஆட்சிபுரியும் போது, சோழ நாட்டை விக்கிரம சோழன்

ஆண்டுவந்தான் என்பது தெரிகிறது. இவ்விரு அரசருடனும் புகழேந்தியார் தொடர்பு கொண்டவர். இவர் காலத்துப் புலவர் ஒட்டக்கூத்தர் என்பது அறியப்படுகிறது. கம்பர் இவர்களுக்குச் சிறிது முந்தியவராகலாம். இவர்கள் காலத்தில் வாழ்ந்தவராகக் கருதப்படும் ஔவையார் புனை பெயரெனவே கொள்ளத்தகும். சங்கத்துச் செஞ்சொல் புலவராம் ஔவைக்கும் இவ் அவ்வைக்கும் தொடர்பில்லை.

## போட்டியும் பொறாமையும்

அக்காலத்தில் சோழ மண்டலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த விக்கிரம சோழன், பாண்டியன் மகள் புகழேந்தியாரின் பயிற்றுவித்தலால் அறிவாற்றலில் சிறந்து விளங்குவதை அறிந்தான். ஒட்டக்கூத்தரின் போதிப்பால் அறிவிற் சிறந்து விளங்கிய தன் மகன் குமார குலோத்துங்கனுக்கு அவளைத் திருமணம் செய்ய எண்ணியிருந்தான். ஆனால் அவன் எதிர்பாரா வகையில் விண்ணுலகடைந்தான். சோழ அரசனின் எண்ணத்தை அறிந்திருந்த ஒட்டக்கூத்தர், அவன் இறந்தபின்னர், பாண்டி நாடு சென்று, குமார குலோத்துங்கனின் கல்வி முதலிய சிறப்பியல்புகளை எல்லாம் எடுத்துக்கூறி, பாண்டியன் திருமகளைத் திருமணம் செய்துவைக்குமாறு வேண்டினார். ஒட்டக்கூத்தரின் திறமையை அறிய விரும்பிய பாண்டியன், கூத்தரை விளித்து, பாண்டியன் மணக்கும் தகுதி மகனை சோழனுக்கு உள்ளதோ என வினவினான். ஒட்டக்கூத்தார் பணிவுகாட்டாமல், காட்டமாக பதில் கூறினார். கூத்தர் விடுத்த

## மாற்றம் வருமாறு:

சோழ மன்னர்கள் ஏறும் கோரம் என்னும் குதிரைகளுக்குப் பாண்டிய மன்னர்கள் ஏறும் கனவட்டம் என்னும் குதிரைகள் ஒப்பாகுமா? காவிரிக்கு வையை ஒப்பாகுமா? ஆத்திமாலைக்கு வேப்பமாலை நிகராகுமா? உலக இருளைப்போக்கும் ஞாயிற்றுக்கு தேய்ந்தும் வளர்ந்தும் திரியும் திங்கள் ஈடாகுமா? வீராதிவீரர்கள் சோழர்களா? பாண்டியர்களா?. புலிக் கொடிக்குமுன் கயற்கொடி முன் நிற்குமா? உறந்தைக்குக் கொற்கை எதிராகுமா? உயிராறு ஓடும் சோழ நாட்டிற்கு

அத்துணை வளமில்லாத பாண்டியநாடு மிக்கதா? இத்தகைய பொருளமைந்த,

"கோரத்துக்கு ஒப்போ கனவட்டம் அம்மானை
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானை
ஆருக்கு வேம்பு நிகர் ஆகுமோ அம்மானை
ஆதித்தனுக்கு நிகர் அம்புலியோ அம்மானை
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானை
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானை
ஊருக்கு உறந்தைநிகர் கொற்கையோ அம்மானை
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநாடு அம்மானை!"

என்ற பாடலைப் பாடினார் கூத்தர். அங்கிருந்த புலவரேறு புகழேந்தியார் உள்ளம் கொதித்தது; மனம் வெகுண்டது; மறுத்துப் பாடினார் புகழேந்தி:

## அவர் பாடலின் பொருள்:

அகத்தியர் தமிழ்வளர்த்துப் பொதிகையில் இருந்தாரா? நேரி மலையிலிருந்தாரா? சிவன் 64 திருவிளையாடல்கள் புரிந்தது மதுரையிலா, உறையூரிலா? திருமால் அவதாரம் மீனா, புலியா? சிவன் முடியில் ஏறிநிற்பது ஞாயிறா திங்களா? ஞானசம்பந்தப் பிள்ளையாரின் ஏடு எதிரேறியது வையையிலா, காவிரியிலா? பேயை ஓட்டுவது ஆத்திமாலையா, வேப்பமாலையா? கடல் வணங்கியது சோழன் காலையா, பாண்டியன் காலையா? பாண்டியர் பெருமை கூறும் தகைத்தோ? பாடல் வருமாறு:

"ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளிந்தது அம்மானை
ஒப்பரிய திருவிளையாட்டு உறந்தையிலோ அம்மானை
திருநெடுமால் அவதாரம் சிறுபுலியோ அம்மானை
சிவன்முடியில் ஏறுவதும் செங்கதிரோ அம்மானை
கரை எதிரல் காவிரியோ வையையோ அம்மானை
கடிப்பகைக்குத் தாதகிஅம் கண்ணியோ அம்மானை
பரவைபணிந் ததும் சோழன் பதந்தனையோ அம்மானை
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வரிதே அம்மானை"

என்பது புகழேந்தியார் பாடல்.

பின்னர் திருமணப் பேச்சு மீண்டும் தொடங்கியது. ஒட்டக்கூத்தரின் நடத்தைக்கு மனம் வருந்தாது மகட்கொடை நேருமாறு பாண்டியனைப் புகழேந்தியார் கேட்டுக் கொண்டார். திருமணம் நடந்தது. மணப் பெண்ணைச் சோழ நாட்டுக்கு அனுப்பும்போது புகழேந்தியாரையும் உடன் அனுப்பினான் பாண்டியன். அங்கும் ஒட்டக்கூத்தர் பழிக்குப் பழிவாங்க நினைத்துப் புகழேந்தியாரைச் சிறையிலிட ஏற்பாடு செய்தார். சோழன் ஒருநாள் உலாச் சென்றபோது சிறைச்சாலையின் வழியாகச் சென்றான். சிறையிலேயே தான் அழகொழுக எழுதிய மங்கையர் பாடல்களாம் அல்லி அரசாணிமாலை, பவளக்கொடிமாலை, முதலியவற்றை பாடிக் கொண்டிருந்தார் புகழேந்தியார். பெண்கள் பலரும் கேட்டு மகிழ்ந்து கொண்டிருந்தனர். இக்காட்சியைக் கண்ட சோழன் கூத்தரையும் புகழேந்தியாரையும் சந்து செய்வித்து மகிழ எண்ணினான்; ஆயின் கூத்தரின் கோணல் நிமிரவில்லை.

இந்நிலையில் சிறை வீடுபெற்ற புகழேந்தியார் மீண்டும் மதுரை செல்ல நினைத்து தம் மாணவியாகிய அரசியிடம் விடைபெற்று, மள்ளுவநாட்டில் தங்கினார். அந்நாட்டை அப்போது ஆண்ட குறுநில மன்னன் சந்திரன் சுவர்க்கி என்பவன்

புகழேந்தியாரின் புகழை முன்னரே கேள்விப் பட்டிருந்தமையால், அவரைத் தன் நாட்டில் தங்குமாறு செய்தான். அப்போது ஒருநாள் புலவரைப் பார்த்து, பாரதத்தின் ஒரு கிளைக் கதையாகிய நளன் கதையை வெண்பாவில் பாடித்தர வேண்டும் என்று வேண்டிக் கொண்டான். புகழேந்தியாரும் அவ்வாறே நளவெண்பாவை இனிமையும் அழகும் ததும்பப்பாடி அவனது அவைக்களத்திலேயே அரங்கேற்றினார். அவனுடன் சில திங்கள் இருந்தபின்னர் பாண்டி நாடடைந்து, மதுரையில் மன்னனிடம் முன் நடந்தவை எல்லாம் கூறினார். கேட்ட பாண்டியன் இன்பமும் துன்பமும் ஒருங்கே அடைந்தான்.

திங்கள் பல சென்றன. சோழ அரசியின் வேண்டுகோளை ஏற்று அங்குச் சென்று அரசிக்கு நளவெண்பாவின் நயங்களை

எல்லாம் விளக்கி அவளை மகிழ்வித்தார். மீண்டும் புலவர் பெருமான் மதுரை அடைந்து, பாண்டியன் அவையை பன்னாள் அலங்கரித்துப் புகழுடம்பை நிலை நிறுத்திப் பூத உடம்பை நீத்தார். நமது நாட்டுப் பழம் புலவர்களுடைய வரலாறுகள் பலவகையாகவும் - கதைகளாகவும் - வழங்குதல் போலவே இவருடைய வரலாறும் பலவகையாக வழங்கிவருகின்றன. "தோன்றா தோற்றித் துறை பல முடிப்பினும், தான்தற் புகழ்தல் தகுதி இன்றே" என்பதற்கிணங்கப் பெரும் புலவர்கள் தம் வரலாறுகளைப் பாடாது போயினர்! என்னே இழப்பு!

## சமயம்

இப்புலவர் பெருமானின் சமயம் வைணவம். இது இவர்தம் பாடல்கள் வாயிலாகத் தெற்றென விளங்கும். இந்நூலின் மூன்று காண்டங்களிலும் திருமால் துதியே காணப்படுகிறது. பாயிரத்தில்

"ஆதித் தனிக்கோலம் ஆனான் அடியவற்காச்
சோதித் திருத்தூணில் தோன்றினான் — வேதத்தின்
முன்நின்றான் வேழம் முதலே எனவழைப்ப
என் என்றான் எங்கட்கு இறை" என்றும்,

கலிதொடர் காண்டத்தில் திருமால் காப்பாக,

முந்தை மறைநூல் முடியெனலாம் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலாம் — நந்தும்
(யானை) புழைக்கைக்கும் நேயப் பொதுவர்மகளிர்க்கும் (இடையர்)
அழைக்கைக்கு முன்செல் அடி.

என்றும், கலிநீங்கு காண்டத்திலும் திருமால் காப்பாக,

"மூலப் பழமறைக்கு முன்னேயும் காணலாம்
(ஆநிரை) காலிக்குப் பின்னேயும் காணலாம் — மால்யானை
முந்தருளும் வேத முதலே என அழைப்ப
வந்தருளும் செந்தா மரை"

என்று வரும் பாடல்கள் மூலம் இவரது சமயம் வைணவமே என்று தேறலாம். ஆயின் சிவனைப் பற்றியும் பாடுகிறார்.

ஆதலால் சமய சமரசநோக்கினர் எனக் கொள்ளல் தகும். வைணவத்தையும் சைவத்தையும் இணைக்க விரும்பிய முதற் சமரசவாதியாக இவர் விளங்கினார்.

## சரிதநூல்கள்

இப்புலவர் பெருமானைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் நூல்களும் இதழ்களும் பின்வருவன: 1) தமிழ் நாவலர் சரிதை 2) புலவர் புராணம் 3) விநோதரச மஞ்சரி 4) தனிப்பாடல் திரட்டு 5) புலவர் கதை 6) தனிச்செய்யுள் சிந்தாமணி 7) அபிதான சிந்தாமணி 8) கலைக்களஞ்சியம்.

## இவர் இயற்றிய பிற நூல்கள்

1. இரத்தினச் சுருக்கம்: இது உவமை பற்றிய அழகிய நூல். மொத்தப் பாடல்கள் 71. மகளிரின் கூந்தல் முதல் பாதம் வரை உள்ள உறுப்புக்களுக்கு உவமைகள் கூறப்பட்டுள்ளன. சிவன், முருகன், விநாயகர், திருமால் முதலிய கடவுளர் பற்றியும் பாடல்கள் உள்ளன.
2. செஞ்சிக் கலம்பகம்: தொண்டை நாட்டுச் செஞ்சிக் கோட்டைத் தலைவன் கொற்றந்தை என்பவன் மீது பாடிப் புகழேந்தியார் பரிசில் பெற்றதாக அறிவிக்கிறது.
3. நளவெண்பா: விரிவு கீழே வரும். (குற்றங்கள் கடிந்து குணங்கள் விரிக்கப்படும்)
4. எடுத்தாண்ட நூல்கள்: திருக்குறள், மணிமேகலை, கம்பராமாயணம், திருவாய்மொழி முதலிய நூல்கள்.

## தமிழ்ப்பற்று:

தமயந்தியின் சுயவரம் பற்றிய செய்தியறிந்த பன்னாட்டு அரசரும் எங்கும் நிறைந்து வருவதாக வருணிக்கும் வெண்பாவில்,

"மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்கும்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி — நாமத்தால்
பாவேய்ந்த செந்தமிழாம் என்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்".

என்று தனது தாய்மொழியாம் தமிழை உவமை முகத்தால் செந்தமிழ் என்று பாடிமகிழ்வது காண்க. சுருங்கக் கூறின், நூல் முழுமையுமே தமிழ் அழகு மிளிர்வது காணலாம். தமயந்தி தனது ஊழ்வினையை நினைந்து அழுதலைக் கூறுமிடத்து,

"வண்தமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோல் தீத்தழல்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாட்டிருந்த — பண்டையுள
வாழ்வெல்லாம் தான்நினைந்து மற்றழுதாள் மன்னிழைத்த
தாழ்வெல்லாம் தன்தலைமேல் தந்து"

என்பார் ஆசிரியர்.

வெப்பம் மிக்க பாலைவனத்தின் ஒரு பக்கம் இருந்துகொண்டு, நளன் இழைத்த கொடுமைகள் எல்லாம் தன் தலைவிதிப்பயனே எனக்கருதி, நளனை நோவாமல், வளமான செந்தமிழ்ப் புலவர்கட்குத் தவறிழைத்த உயர்குடிப் பிறப்பாளர் பின் வறுமையால் வருந்துவதுபோல, தனது முன்னைய வாழ்வை நினைந்து அழுதாள்

மேலும், புட்கரன் நளனிடம் நாடு நகரங்களை எல்லாம் கொடுத்துவிட்டுத் தன் நாடு திரும்புவதைக் கூற வந்த புலவர்,

"அந்த வளநாடும் அவ்வரசும் ஆங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான் — செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லால் நளன் என்று போற்றிசைக்கும்
கோவேந்தற்கு எல்லாம் கொடுத்து"

எனப்பாடுகிறார்.

இங்குச் செந்தமிழ்ப் புலமை மிக்க அறிஞர்கள் தம் நாவில் பொருந்திய சொற்பொருள் மிக்க பாவகையினால் நளன் என்று வாழ்த்திப் பாடுகின்ற என்ற அடிகளில் தமிழையும் தமிழ்ப் பாவலரையும் புகழுமாறு கண்டுமகிழ்க. இவ்வாறு பல இடங்களில் தம் தமிழ்ப் பற்றினைப் புலப்படுத்துவார் புகழேந்தியார்.

## கதைச்சுருக்கம்

பழமைக்குள் மறைந்துபோன வரலாற்றுக் குறிப்புகள் பற்றிக் கவலைப்படாமல், புகழேந்தியாரின் நூலுள் நுழைந்து அவர்தம் கலைத்திறன், கல்விச்சிறப்பு முதலியவற்றைக் கண்டு மகிழ்வதே சாலச்சிறந்ததாகும். முதற்கண் நளவெண்பா நிகழ்ச்சிகளைச் சுருங்கக் காண்போம். நிடதநாட்டு மன்னன் நளன். அவன் செங்கோலன்; குடிதழீஇக் கோலோச்சினவன். ஒருநாள் அவன்சோலை வளம் காணச் சென்றான். அவன்முன் ஓர் அன்னப் பறவை தோன்றியது. அஃது ஆண்டிருந்த நீர்நிலையில் வாழ்ந்து வந்தது. அதன் அழகில் மயங்கிய நளன் அதனைப் பிடித்தான். அன்னம் அஞ்சி வாடி நின்றது. அதனால் அதனை வெளியே விட்டனன். அது பறந்து சென்றது. பறந்தது மீண்டது. மீண்டு வந்த அன்னம், மன்னா, உனக்கு ஒரு நன்மை செய்யக் கருதியுள்ளேன்; உனது அழகுக்கு ஏற்ற அழகி ஒருத்தியை மணம் செய்விப்பது எனது கருத்து. அவள் வீமன் குலமடந்தை. அழகே உருவான ஆகத்தாள். தமயந்தி என்னும் பெயரினள். இவ்வாறு அது கூறியது. கூற்றில் மயங்கிய நளன் அன்னத்தை அவள்பால் தூது அனுப்பினான். தமயந்தியிடம் சென்ற அப்புள் அவள் இசைவு பெற்று வந்தது. சுயம் வரம் நிகழ்ந்தது. இந்திரன் முதலிய தேவர்களும் நளன் உருவில் அம்மண்டபத்தில் குழுமினர். மண்ணுலக மன்னரும் திரண்டிருந்தனர். ஆயினும் தமயந்தி நளனுக்கே மாலைசூட்டி மணந்துகொண்டாள்.

இந்திரன் முதலிய தேவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பும் வழியில் கலிமகன் எதிர்ப்பட்டான். அவனிடம் நடந்தவற்றை உரைத்தனர். கலி சினம் கொண்டான். நளனைச் சிறுமைப்படுத்துவேன்; தமயந்தியையும் பிரிப்பேன் என்று சூளுரைத்தான். ஆண்டுகள் சில கழிந்தன. கலி காலம் பார்த்திருந்தான். புட்கரன் என்னும் மன்னனைச் சூதாட ஏவினான். நளன் சூதில் நாடு நகர் அனைத்தும் தோற்றான். மக்கள் இருவரையும் மாமனார் ஊராகிய குண்டினபுரம் அனுப்பினான். தமயந்தியுடன் கானகம் சென்று அங்கு உறைவானாயினன்.

பாழ்மண்டபம் ஒன்றில் படுத்து உறங்கிய நளன், நள்ளிரவில் தமயந்தியை தன்னம் தனியாக விட்டு நீங்கினான். உறங்கி எழுந்த தமயந்தி புலம்பினாள். வணிகன் ஒருவன் உதவியால் சேதிநாடு அடைந்து, ஆண்டிருந்து தந்தைநாடான விதர்ப்பம் சென்று தூதன் ஒருவன் மூலம் நளனை நாடவிட்டனள். பிரிந்து சென்ற நளன் கார்கோடகன் என்னும் பாம்பு தீண்டியதால் உருவம் கறுத்தனன். பழைய உருவம் பெற நினைத்தால் அப்பாம்பு கொடுத்த ஆடைகள் இரண்டைப் பெற்றுக் கொண்டு அயோத்திசென்று, மன்னன் இருதுமன்னனுடைய சமையல் காரனாகவும் தேரோட்டியாகவும் வாகுவன் என்னும் பெயரில் உறைந்து வந்தான்.

தூதுவன் பலவிடத்தும் தேடி, இறுதியில் அயோத்தியில் நளன் இருப்பதாக உரைத்தான். தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் ஏற்பாடாயிற்று. இருது மன்னனுக்குத் தேரோட்டிவந்து மண்டபம் சேர்ந்தான். இருவரும் வருவது கண்ட தமயந்தி தன் மக்களை அனுப்பி நிகழ்ந்ததைத் தோழி மூலம் அறிந்து, தன் தந்தையுடன் தேரோட்டியிடம் சென்று உண்மை உருவைக் காட்ட வேண்டினள். வாகுவன் நளனாகத் தோன்றினான். பின்னர் நளனும் தமயந்தியும் மக்களுடன் படைகள் புடை சூழ நிடதநாடு சென்று, மாவிந்த நகரம் புக்கு புட்கரனோடு மறுத்தாடி வென்று இழந்த நாட்டைக் கைப்பற்றி, முடிசூடி செங்கோல் செலுத்தினன். இதுவே கதைச்சுருக்கம்.

## இலக்கியநயம்

இசையைக் கேட்கிறோம்; மகிழ்கிறோம்; இன்பம் பெறுகிறோம். நாடகம் பார்க்கிறோம்; பரவசமடைகிறோம்; களிப்படைகிறோம். இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்கிறோம்; கண் குளிர்கிறது; மனம் மகிழ்கிறது. ஆயின், இவைபோன்ற கண்டு, கேட்டு மகிழகிற காட்சிகள் சிலபோதில் மறைந்துவிடுகின்றன. இக்காட்சிகளையும் - உலகியல் நிகழ்ச்சிகளையும் - என்றும் மறவாமல், நினைத்தபொழுதெல்லாம் இடையறாத இன்பத்தைத் தருவது எது? இலக்கியமே எனல் மிகையன்று. நம் தமிழ்ச் சான்றோர் இத்தகு இன்பக் காட்சிகளை எல்லாம் பாக்கள்

என்னும் இலக்கியப் பேழையுள் அடக்கி வைத்துப் போற்றியுள்ளனர். அவை நிலமெனப் பரந்தும்; கடலென ஆழ்ந்தும், வான் என உயர்ந்தும் விரிந்து கிடக்கின்றன. சமுதாயத்தைச் சித்திரிக்கும் ஓவியங்களாகத் திகழ்கின்றன இக்காவியங்கள். அவற்றை அனுபவித்து மகிழ்வதும், வழித்தோன்றல்களுக்கு வழங்குவதும் நம் கடன் அன்றோ?

இவற்றை நமக்கு ஆக்கித் தந்த புலவர் பெருமக்களைக் குமர குருபரர் போற்றியுள்ளமை கேட்டு மகிழத்தகும்.

"கலைமகள் வாழ்க்கை முகத்தது எனினும்
மலரவன் வண்டமிழோர்க்கு ஒவ்வான் — மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு"

என்பது அவர்தம் அருள்வாக்கு.

## நூலின் பெருமை

அழியாத இலக்கியச் செல்வமாகிய நளவெண்பா என்னும் நயமிக்க நூலை ஆக்கி அருளியவர் பெரும்புலவர் - வெண்பாப்புலி புகழேந்தியார் ஆவர். இந்நூல் வடநாட்டு மன்னன் நளன் என்பான் வாழ்க்கை வரலாறு கூறினும், இதன்கண் பொதிந்து கிடக்கும் அறம், மறம், மானம், நன்றியறிதல், அன்பு, அருள், ஆக்கம், ஊக்கம், காதல், கற்பு முதலிய அறப்பண்புகளும், கற்பனை, உணர்ச்சி, புனைவு முதலிய இலக்கியக் கூறுகளும் நாம் அறிந்து பயன் பெறுதல் இன்றியமையாதது. "நவில் தொறும் நூல் நயம் போலும்" என்பது நளவெண்பாவுக்குப் பெரிதும் பொருந்துவதாம். கற்போர் மனத்தைக் கனிவிக்கும் தன்மையது. இந்நூல் நால்வகைப் பாக்களுள்முதன்மைப் பாவாகிய வெண்பாக்களால் ஆகியது; முழுதும் நேரிசை வெண்பாக்களே.

### உவமைகள்:

தமயந்தி நளன்பால் தணியாக் காதல் கொள்கிறாள். அவள் கண்களுக்கு அவன் உருவம் உருவெளித் தோற்றமாக

வெளிவருகிறது. அதனை உண்மை உருவம் என மயங்கிக் கலங்குகிறாள். கண்ணின் கருமணியாய் ஆருயிராய் பிரியாது தன் கண் நின்ற நாணினையும் இழக்கிறாள்; நடுங்குகிறாள். உண்ணாள்; உறங்காள். ஓவியம்போல் அசைவற்று நிற்கிறாள். இவளது தளர்ந்த நிலைக்கு - வாடிய தன்மைக்கு ஓர் உவமம் காண்கிறார் ஆசிரியர். இளம் தளிர் மெல்லிது; ஞாயிற்றின் ஒளி கண்டாலே வாடும்; வதங்கும்; அக்கதிர்கள் தன்மேல் படின், தளர்ந்து சாம்பி, வாடிவிடும். இம்மெலிய தளிரை நெருப்பில் இட்டால், எத்தன்மைத்து? உருச்சிதைந்து, நிறம் குன்றிக் கருகும் அன்றோ? அதுபோல் தமயந்தி உடாது, உண்ணாது, உறங்காது தளர்ந்து, இயற்கை அழகு குன்றி நின்ற நிலைக்கு உவமையாகக் கொள்கிறார். பாடல் காண்க:

"உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போல் வேகின்ற மென்தளிர்போல் — பிள்ளைமீன்
புள்ளிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளிக்கச் சோர்ந்தாள் உயிர்"

தமயந்தி காதல் பெருக்கால் எண்ணம், நாணம், பேச்சு முதலியன அடங்கி, ஆவியும் சோர்ந்தாள் என்பதாம்.

இனி நளன் நள்ளிரவில் காட்டிடத்தே தமயந்தியைத் தனிமையில் விட்டுச்செல்ல ஆற்றாது வருந்தும் நிலையை வருணிக்கும் புலவர் பெருமான்

"போய்ஒருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின் — தோயல்
கடைவார் தம் கைபோல ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம்". எனப்பாடுகிறார்.

தமயந்தியைப் பிரிந்து செல்ல எண்ணிய நள மன்னன் மனமானது, தயிர் கடைகின்ற ஆய்ச்சியர் கைபோல், தமயந்தி பால் செல்வதும் மீண்டு வருவதும், பின்னும் அவள்பால் போவதுமாக இருந்தது என்பதாம்.

அன்றியும், கலிமகன் நளனைத் துன்புறுத்த இருக்கும் நிலைக்கு

அவன் சார்ந்திருத்தலை, இறைவன் திருமந்திர மொழியை ஓதி, அவன் அருள் பெறாதவர்களிடம் தீவினைகள் எல்லாம் சேர, அவற்றால் அவர்கள் துன்புறுவது போல, நளன்பால் கலி சேர்ந்தான் என்று கூறும் உவமை எண்ணி மகிழத்தகும் பாடல்;

"நாராய ணாய நமவென்று அவனடியில்
சேராரை வெந்துயரம் சேர்ந்தாற்போல் — பாராளும்
கொற்றவனைப் பார்மடந்தை கோமானை வாய்மைநெறி
கற்றவனைச் சேர்ந்தான் கலி"

இறுதியாக, மற்றோர் உவமையைக் காண்போம். சந்திரன் சுவர்க்கி என்னும் குறுநில மன்னன் அறிவுத் திறமும் மிக்கவன்; கற்றோர்பால் வற்றா அன்புடையவன். புகழேந்தியாரைப் போற்றி ஆதரித்த புகழினன். இவன் தூண்டுதலால் இந்நூல் தமிழுலகுக்குக் கிடைத்ததெனின், அவன் புகழை எங்ஙனம் வியப்பது! இத்தகையோன்பால் தன் நுண்ணறிவு தோன்றப்பாடிய பாடல் காண்க:

"வண்டார் வளவயல் சூழ் மள்ளுவநாட் டெங்கோமான்
தண்டார் புனைசந் திரன்சுவர்க்கி — கொண்டாடும்
பாவலன்பால் நின்ற பசிபோல நீங்கிற்று
காவலன்பால் நின்ற கலி"

இப்பாடலில், சந்திரன் சுவர்க்கி என்னும் வள்ளலால் போற்றப்படும் தமிழ்ப் புலவர்தம் பசி பறந்தோடுதல் போல, கலி நளனது வித்தை முதலியவற்றைக் கண்ட கலி விலகிச் சென்றது என்பதாம். இதில் உவமை நயத்தோடு புகழேந்தியாரின் நன்றிமறவா நற்பண்பும் விளங்கிடக் காணலாம். இவைபோலும் உவமைகள் பல உள. விரிக்கின் பெருகும்.

## சொல்லாட்சி

கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பனுக்குச் சொற்கள் தாமே முந்துற வந்து நிற்கும் என்ப. அது போலவே, புகழேந்தி யாரும் சொற்செல்வர். இடமறிந்து சொற்களை ஆளும்திறல் உடையவர். சில காண்போம்.

சுயம்வர மண்டபத்தில் சோழ மன்னனைத் தமயந்திக்குச் சுட்டிக்காட்டும் போது, அவனது காவிரியாற்றின் சிறப்பை எடுத்துரைக்கிறார்

> "பொன்னி அமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
> சென்னி தடவும் திருநாடன் — பொன்னிற்
> சுணங்கவிழ்ந்த பூண்முலையாய் சூழமரில் துன்னார்
> கணங்கவிழ்ந்த வேலன்இவன் காண்."

காவிரியாறு பெருக்கெடுத்தக் கமுகின் உச்சிவரை உயர்ந்து ஓடும் நீர்வளம் மிக்க சோனாடு என்பது பொருள். காவிரி நீரை அமுதம் என்றும், அது பெருக்கால் உயர்வதைக் 'கொழுந்து' என்றும் கூறி, சுவை தோன்றக்கூறிய அருஞ்சொல்லமுதை மாந்தி மகிழ்வோமாக. காவிரியைப் பொன்னி என்றது, அது வற்றாது உயிராறகப் பாய்ந்து வளம் கொழித்தலின், உழவர் பொன்னும் பொருளும் குறைவின்றிப் பெற்று மகிழ்ந்தனர் என்பதைக்குறிக்கும். 'அமுதம்' உண்டாரை நெடிது வாழ வைப்பதுபோல, காவிரியாற் பயன்பெறுவோர் கவலையின்று நெட்டாயுள் பெற்று வாழ்வோராவர் என்பதும் பெறப்படும்.

"ஓடாத தானை" 'அறம் கிடந்த நெஞ்சம்' 'அருள் ஒழுகும் கண்' "குதலைவாய் மைந்தர்" (குழந்தைகள்) எனப் பலவிடத்தும் உரிய அடைகளைப் பெய்து சொல்லின்பம் வழங்கும் புலவர்தம் அறிவு மாட்சியை என்னென்பது!

## ஆட்சிமுறை

நளனது ஆட்சியைச் சித்திரிக்கும் புகழேந்தியாரின் கலைத்திறன் வியக்கத்தக்கது. நளன் அறம் திறம்பாத ஆட்சியாளன். மக்கள் பகைமை நீங்கி வாழ்ந்தனர். அஃறிணைப் பொருள்களும் நல்லிணக்கத்துடன் வாழ்ந்தன என்கிறார். மகளிர் தம் அருகில் வைத்துக் கொண்டு பாலும் பழமும் ஊட்டி வளர்க்கின்ற பச்சை நிறக் கிளிகளும், போராட்டக் குணம்மிக்க பருந்துகளும், பகைமை நீங்கி, ஒரே கூட்டிற்குள் வாழும்படி முறை தவறாத செங்கோலினன் என வியக்கிறார். கிளியும் பருந்தும் பகையுடையன; இம்மன்னன் ஆட்சிமுறையினால்,

இவை பகை ஒழிந்து வாழ்வதாயின், ஆறறிவு படைத்த மக்கள் மனமொத்து வாழ்தல் சொல்லவேண்டா என்பது குறிப்பால் பெறப்படும். இவ்வாறே, இளங்கோ அடிகள்,

"அரவும் சூரும் இரைதேர் முதலையும்
உருமும் சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு"

என்று பாண்டிய மன்னர்தம் செங்கோல் சிறப்பைப்பாடுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தகும். மேலும், அந்நாட்டில், குற்றவாளிகளும், தளர்ந்தோரும் புலம்புவோரும் கலங்குவோரும், நெறிபிறழ்வோரும் ஒருவரும் இலர் என அம்மக்களைப் புகழ்கிறார் புலவர் பெருமான்; அழகிய அப்பாடல் வருமாறு

"வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
அஞ்சிலம்பே வாய்விட்டு அரற்றுவன — கஞ்சம்
கலங்குவன மாளிகைமேல் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு"

இப்பாடலைக் கேட்கும் தோறும் செவிக்கின்பம்; நினைக்கும் தோறும் மனக்கின்பம்; ஆயுந்தோறும் உயிர்க்கின்பம். அந்நாட்டில், கோணி இருப்பன கொல்லும் தன்மையுடைய விற்களே; மக்களுள் கொலை ஆரோ, கோணல் புத்தியுடையோரோ இலர்; துன்பத்தால் மனந்தளர்ச்சியடையும் மக்கள் எவரும் இலர்; மகளிரின் நீண்ட கூந்தலே நிலைகுலைந்து தளரும்; அரற்றியும் அழுதும் கதறுவோர் வேறுயாரும் இலர்; மகளிர் காற்சிலம்புகளே அரற்றுகின்றன. கலங்குவன தண்ணீர்த் தடாகங்கள்; மக்கள் எவரும் கலக்கம் அடையார்; பெண்களின் கண்களே பிறழும்; மக்கள் நேறி பிறழார். எக்குறையும் இல்லாதோரே அவன் நாட்டிலும் நகரிலும் உள்ளனர் என்பதைக் குறிப்பால் உணர்த்தும் நயம் பாராட்டத்தக்கது. கம்பநாடரும் எல்லாரும் எல்லாப் பெருஞ்செல்வமும் எய்தலாலே, இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை மாதோ! என்பாராயினர். மற்றுமொரு எழிற்சித்திரம் காண்க:

"தெரிவன நூல் என்றும் தெரியா தனவும்
வரிவளையார் தங்கள் மருங்கே — ஒருபொழுதும்
இல்லாதனவும் இரவே இகழ்ந்தெவரும்
கல்லாதனவும் கரவு"

இப்பாடல் நினைந்து நினைந்து உருகும் தன்மைத்து அன்றோ: பொருள் காண்போம்

அந்நகர மக்களால் தெரியப்பட்டவை (ஆராயப்பட்டவை) நூல்களே; தெரியப்படாதவை பெண்களின் இடைகளே; எப்போதும் இல்லாதவை இரத்தல்; அவர்கள் கல்லாதவை வஞ்சனை. யாவரும் கல்வியாளர் என்று குறிக்கத் தெரிவனநூல் என்றும், பெண்டிர் இடை இல்லையோ என்னும்படி கண்ணுக்குத் தெரியாதவையாக உள்ளன என்று குறிக்கத் தெரியாதன மருங்குல் என்றும், இரப்போர் யாரும் இலர் என்பது குறிக்க இல்லாதனவும் இரவே என்றும், வஞ்சித்துப் பொருள் கவர்வார் யாரும் இலர் என்பது குறிக்க கல்லாதனவும் கரவே என்றும் கூறியுள்ள கலை நுட்பம் அளவிடற்பாலதோ? இத்தகைய வாழ்வியல் சிறப்புக்கள் நல்லாட்சியில் தானே மலரும்!

## காப்பியக் கூறுகள்

நளவெண்பா ஒரு வடநாட்டுக் கதை; பாரதத்தின் ஒரு கிளைக்கதை; நளோபாக்யானம் என்பதைத் தழுவியும் விரித்தும் எழுந்த ஒரு சிறுகாப்பியம். காப்பியக் கூறுகளான விழுமிய பொருள் (Sublime Theme), உணர்ச்சி (Emotion) கற்பனை (Imagination) வடிவம் (Form or Technique) என்ற நான்கும் நலம்பெற அமைந்துள்ள குட்டிக்காப்பியம் நளவெண்பா. காப்பியம் பெண்மைத்து (Epic is Feminine) என்பார் ஆபர்குளோம்பி என்னும் அறிஞா. அது ஒரு விழுமிய கருத்துப் பெட்டகம் (A Record of Best thoughts) என்பார் எமர்சன். இத்தகு இயல்புகள் எல்லாம் அமைவுறப் பெற்றதுவே இச்சிறுகாப்பியம். இவற்றுள்ளும் கற்பனை இன்றேல் காப்பியமே இன்று; ஏன், இலக்கியமே இன்று. கற்பனை வளத்திற்குச் சில காட்டுதும்:

தமயந்தி காதல் வயப்பட்டவளாய், சிவபெருமான் காமனை எரித்தது முழுப்பொய். எரித்தது உண்மையானால், மன்மதனின்

அம்புகளாகிய முல்லை, தாமரை, நீலம், மா. அசோகு ஆகிய இவை இலவந்திகைச் சோலையிலும் தடாகத்திலும் இருப்பனவாகலானும் இவற்றைக் கொண்டே காமன் ஆட்சி செய்தலானும், இவற்றைக் குறிக்க 'காமன் படைவீடு' என்றார்; அவனுக்குத் தென்றலேதேர்; அது உலவிவருவது வானத்தேயாகலின் வானும் தேர்வீதி என்றார்; அவனது கொடி மீன்; அஃது உலவுவது நீர்; நீர்ப்பெருக்கைக் கடல் என்றார்; மீனக் கொடியும் கடலும் அவனுக்கு ஆடை; இத்தனையும் இருந்தும் அவன் ஆட்சி செய்ய ஏற்ற இடம் இல்லெனின் பயனின்றாம். அவன் காதலர்பால் ஆட்சி செலுத்துகிறான் ஆதலால், அவனது வில் வலிமை தோன்ற வையமெல்லாம் கோதண்ட சாலை என்றார்; இவை எல்லாம் இருந்து அவன் ஆட்சி செய்து கொண்டிருக்க, அவன் சிவபெருமான் நெற்றிக்கண்ணால் எரியுண்டு இறந்து போனான் எனக்கூறுவது எவ்வாறு பொருந்தும் எனத் தமயந்தி வியப்பும் நயப்பும் தோன்றக் கூறுவதாக அமைந்தது இப்பாடல்; பாடலைக் கவனிப்போம்

"கானும் தடங்காவும் காமன் படைவீடு
வானும்தேர் வீதி மறிகடலும் — மீனக்
கொடியாடை வையமெல்லாம் கோதண்ட சாலை
பொடியாடி கொன்றதெல்லாம் பொய்"

இதனை எத்துணை முறை படித்தாலும் தெவிட்டாதன்றோ? மற்றொன்று காட்டி இப்பிரிவை நிறைவு செய்வேன். தமயந்தியின்தனிமைத் துயரைத் சித்திரிக்கும் புகழேந்தியார்,

"தையல் துயர்க்குத் தரியாது தம்சிறகாம்
கையால் வயிறலைத்துக் காரிருள்வாய் — வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல்
கூவினவே கோழிக் குலம்"

தமயந்தி படுகின்ற துன்பத்தைப் பொறாத கோழிக் கூட்டங்கள், தம் சிறகுகள் என்னும் கைகளினால், தம்வயிற்றை மோதி அடித்துக் கொண்டு சூரியனை விரைவில் தேரேறி வருக என்று அழைப்பன போன்று கூவின என்பதாம். இதில்

அமைந்துள்ள தற்குறிப்பேற்ற வணி உன்னற்பாற்று. இதனை ஒட்டிய கருத்துடைய பாடல் ஒன்றைக் கம்ப நாடர் கைகேசியின் கொடுமையைக் கூறுமிடத்துப் பாடியுள்ளார். வருமாறு:

எண்டரும் கடை சென்ற யாமம் இயம்புகின்றன — ஏழையால்
வண்டு தங்கிய தொங்கல் மார்பன் மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கி அம்சிறை ஆன காமர் துணைக்கரம்
கொண்டு தம்வயிறு எற்றிஎற்றி விளிப்ப போன்றன — கோழியே

என்பது கம்பச் சித்திரம். பெரும்புலவர்களின் கருத்துக்கள் உலகெங்கும் ஒன்று படவே செய்யும். (Great men think alike) என்பது பழமொழி.

## குற்றம்கடிதல்

அரசர்கள் நற்குண நற்செயல்களை உடையவர்களாகத் திகழ்தல் வேண்டும் எனக்கூறும் திருவள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அவைபற்றி விரிவாகக் கூறியதுடன், அரசர்கள் எவ்வெக்குற்றங்களைக் கடிதல் வேண்டும் என்பதையும் குற்றம் கடிதல் என்ற அதிகாரத்தில் விவரித்துள்ளார். அம்முறையில் புகழேந்தி யார் தம் காப்பியத்துள் கடியத்தக்க குற்றங்களாக ஐந்தினை விவரித்துள்ளார். இக்குற்றங்கள் பொதுவாக யார் மாட்டும் நிகழ்தல் கூடாது. சிறப்பாக ஆட்சியாளர் அவற்றை அறவே கடிதல் வேண்டும் என்கிறார் புலவர் பெருமான். அக்குற்றங்களைப் பின்வரும் வெண்பாவில் பட்டியலிடுகிறார்:

"காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்தல் இவைகண்டாய் — போதில்
சினையாமை வைகும் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி"

அமைச்சர் முதலியோர் சூதினால் வரும் தீமைகளை எடுத்துக்கூறும் நிலையில் இப்பாடல் எழுந்துள்ளது. காதல்: வேறு மங்கையரை விரும்புதல், பிறன்மனை விழைதல், காமவெறி எனவும்படும். இதனால் ஒருவனது ஒழுக்கம்கெடும்.

உடல் கெட்டு வாழ்வழியும். பழியும் பாவமும் ஏற்படும். எனவே இது கூடாது. கவறாடல்: இது சூதாடுதல். இப்பழக்கம் உடையவன் பல குற்றங்களைச் செய்ய நேரிடும். முகத்தில் ஒளி குன்றும்; குடும்பத்தில் திருமகள் வாசஞ்செய்யாள். ஆக்கம் இழக்க நேரிடும். இஃது ஒன்றெய்தி நூறு இழக்கும் கேட்டுக்கு வழி கோலும். ஆகவே இதுவும் கூடாது.

பொய்ம்மொழிதல்: வாய்மை தவறல்: பிறர்க்குத் தீமை மயக்கும் வினைகள் செய்யத் தூண்டுவது பொய்ம்மை. "பொய்யாமை, பொய்யாமை ஆற்றின் அறம் பிற செய்யாமை செய்யாமை நன்று" என்பார் வள்ளுவர் பெருந்தகை.

ஈதல் மறுத்தல்: இஃது ஓர் கொடிய செயல்; பாவச் செயல். தானும் கொடாது, கொடுப்போரையும் தடுத்தல் இரட்டைக் குற்றங்கள் ஆகும். ஈதல் அறம்; ஈதல் மறுத்தல் அறத்தினை அழித்தலாம். 'கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்" என்பது வாய்மொழி. தான் கெடுதலுடன் தன் சுற்றமும் கெடும். ஆதலால் இதுவும் கூடாது. கள்ளுண்டல்: குடி குடி கெடுக்கும். குடிப்பழக்கம் உடல்நலம் கெடுக்கும். குடிகாரனைப் பெற்றெடுத்த தாயும் வெறுப்பள். மக்கள் பழிப்பர். சான்றோர் முகத்தில் விளித்தல் முடியாது. அறிவைக் கொன்று கொலை முதலிய குற்றங்கள் செய்யத் தூண்டுவதும் இக்குடிப்பழக்கமே. "உண்ணற்க கள்ளை" என்று கட்டளை இடுகிறார் திருவள்ளுவர். எனவே கள்ளும்கைவிடற் பாலதாம். இவ்வாறு இவ் ஐவகைக் குற்றங்களையும் எடுத்துக் கூறிமக்கள் இவற்றை விலக்க வேண்டும் என்ற அறிவுரையைத் தருவது இந்நூல்.

இந்நூலால், இம்மையின்பமும் மறுமை இன்பமும் பெறலாம் என்பது சான்றோர் துணிவு.

*வாழி நளவெண்பா வாழி புகழேந்தி*
*வாழி நளன்காதை.*

# செம்பொருள்

*இரா.சதாசிவம்*

மெய்ப்பொருள் உணர்ந்த சான்றோர் வெற்றியை ஆசிரியர் தொல்காப்பியர் பொருளோடு புணர்ந்த பக்கம் என்பார். உரை ஆசிரியர் மெய்ப்பொருள் உணர்ந்த பக்கம் என உரை காண்பர். உரைக்குரிய மேற்கோளாகத் திருவள்ளுவரின் மெய்யுணர்வு என்னும் அதிகாரத்தில்,

> "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே
> மெய்யுணர்வு இல்லா தவர்க்கு"

என்னும் திருக்குறளை எடுத்துரைக்கிறார்.

உயிர் உலகின் கவர்ச்சியில் கருவி காரணங்களின் வழி புறத்தே அலையும் போக்குடையதாகும். ஐம் பொறியும் மனமும் புலன்வழிச்சென்று மயங்கிக் கிடக்கிறது. அம்மயக்கம் தெளிந்து பொறி புலன்களில் காணும் இன்பம் நிலையற்றது என்பதை உணர்ந்த பொழுதும் அதனிடமிருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது. ஒருவாறு தெளிந்த வைராக்கியத்தால் சுவையில் உவர்ப்புற்று உறுதியாக நிற்கும் நிலையை ஐயுணர்வு எய்திய நிலை என விளக்குவர். இவ்வண்ணம் "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்று" என்னும் திருவள்ளுவர் கூற்று பொறிகள் புலன் வழிச் செல்லாது அடங்கிய வழியும் பயன் இல்லை; ஐம்பொறி அடக்கம் சிறந்த ஒழுக்கம் எனினும் அது மட்டுமே பயன்தருவதில்லை. அதனோடும் மெய்ப்பொருள் அறிவு வேண்டும் என்பதாகும். "மெய் வகை தெரிதல் ஞானம்" என்பது வாழ்க்கையின் தொடக்க நிலையாக திருவள்ளுவரும் திருத்தக்க தேவரும் கொள்கின்றனர். சீலம் நிறைந்த ஒழுக்கம் மெய்யுணர்வைப் பெறுவதற்கு இன்றியமையாத தொடக்கமாகும். புலன் வழிச் செல்லாது மனம் அடங்கித் தியான நிலையில் நின்ற வழியும் பயனில்லை என்பது வாழ்க்கைப் பயணத்தில் ஒரு குறிப்பிட்ட மைல் கல்லை எட்டிய நிலையிலும் பயணம் முற்றுப் பெறாதாகையால் பயனில்லை என்றார்.

அதற்கு அடுத்த பயணம் மெய்யுணர்வு எய்துதலாகும். எதனோடும் பற்றுதல் இன்றி பொறியும் மனமும் அடங்கி உள்முகமாகத் தியான நிலையில் அசைவற்று நிற்கும் நிலையில் உயிர் புறக்கவர்ச்சி நீங்கியதால் உள்முகமாக வேகமற்று ஆறி அடங்கிய நிலையை அடைகிறது. குயவன் காரியப்படுத்தச் சக்கரத்தைச் சுழற்றாத நிலையில் சக்கரம் சுழற்சி தணிந்து ஆறி நிற்றல் போல மனம் நிற்கிறது. அப்போது மனத்திற்கு வேறு பற்றின்மையால் தூய நிலையில் உள்ள மனம் தூய செம்பொருளைப் பற்றுகிறது. இவ்வாறு பற்றி நிற்கும் நிலையே மெய்யுணர்வு எய்திய நிலையாகும். இத்தகைய வாகையே மெய்ப்பொருள் வெற்றியாகும் என்பதைத் தொல்காப்பியர்,

> "தாவில் கொள்கைத் தத்தங் கூற்றைப்
> பாகுபட மிகுதிப் படுத்த லென்ப" எனக்கூறுவார்.

இத்தகுதாவில் கொள்கைச் சான்றோர் பலரும் தமிழ்நாட்டில் பண்டுதொட்டு மிக்கிருந்தனர். அவர்கள் ஞானம், காட்சி, ஒழுக்கம் என்னும் கடைப்பிடி உடையவர்களாக விளங்கியதோடு செம்பொருள் நாட்டமுடையவர்களாக வாழ்ந்து மகிழ்ந்தனர்; உள்ளொளி பெற்று விளங்கினர். அத்தகைய பெருமக்களைத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர்,

> "தாவில் கொள்கை தம்தொழில் முடிமார்
> மனன் நேர்பு எழுதரு வாள்நிற முகனே"

எனப் போற்றுகின்றார்.

மெய்ப்பொருள் உணர்ந்த தவஒழுக்கமுடைய தாவில் கொள்கையாளர் மனத்தின் கண் ஒளி வண்ணமாக ஓவியத்தில் எழுத ஒண்ணாச் செம்பொருள் திருமுகக் காட்சியில் திளைத்தனர். செம்பொருளாகிய முருகனை வழிபடுவோர் பலரும் நிறைந்திருந்தனர் என நக்கீரர் கூறும் மெய்ப்பொருட்காட்சி இனியதாகும்.

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் காட்டிய செம்பொருட் காட்சி உணர்வு நக்கீரர் பாடலில் இனிது விளங்குவது போலவே திருஞான சம்பந்தரும் தாம் கண்ட காட்சி அனுபவத்தை

விளக்குகின்றார். திருஞான சம்பந்தர் தென்குடித்திட்டை என்னும் திருத்தலத்திற்குச் செல்கின்றார்; மெய்ப்பொருள் உணர்ந்த சான்றோர் பலரையும் காண்கின்றார். பொய்ப் பொருளின் கவர்ச்சியின் வேகம் தணிந்து மனம் ஆறினார் பலரும் ஐம்பொறி அடங்கி மெய்ப்பொருளே பற்றுதற்குரியதென்னும் தெளிவுடையவராக தென்குடித்திட்டை இறைவனை வழிபடுகிறார்கள் என எடுத்துரைக்கிறார்.

"ஆறினார் பொய்யகத்து ஐயுணர்வு எய்தி மெய்
தேறினார் வழிபடும் தென்குடித் திட்டையே"

என்னும் திருஞானசம்பந்தர் திருப்பாட்டு திருவள்ளுவருடைய "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே, மெய்யுணர்வு இல்லாதவர்க்கு" என்னும் திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்குகிறது.

எனவே வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபு வழி தொல்காப்பிய நெறியைப் பின்பற்றி காலந்தோறும் மெய்ப்பொருளைப் போற்றி இனிது வாழ்ந்து வந்த சமுதாயம் தமிழ்ச் சமுதாயம். தமிழ் கூறும் நல்லுலகமெங்கும் செம்பொருள் புணர்ப்புடன் நெறியின் நின்ற மக்கள் பெருக்கத்தைக் கண்ட செய்தியையே ஞானசம்பந்தர் தென்குடித்திட்டைப் பதிகத்தில் போற்றியுரைக்கின்றார்.

காலங் காலமாக பொருளியல் உலகம் போலவே மெய்ப்பொருள் நாட்டமுடைய சான்றோர் இயக்கம் ஒன்று தமிழகத்தில் வாகை சூடி வந்தது என்பது தொல்காப்பிய இலக்கணத்தாலும் ஞானசம்பந்தர் இலக்கியத்தாலும் நம்மால் அறியமுடிகிறது என்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

# செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா.சதாசிவம்
பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116